அன்பான வாடிக்கையாளர்களே,

இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட வாடிக்கையாளர் சாசனத்தின் கீழ் வருகின்ற தேவைப்படுத்தலொன்றினை அநுசரித்து, உங்களுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான வங்கித்தொழில் உற்பத்திகளை / சேவைகளை தெரிவுசெய்வதற்காக உங்களுக்கு உதவுவதற்கு முனைகின்ற முக்கிய விடய ஆவணங்களைக் (KFD) கொண்ட தொகுதியொன்றினை நாம் தயாரித்துள்ளோம்.

நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கியில் தனிப்பட்ட வங்கித்தொழில் வாடிக்கையாளர்களுக்காக கிடைக்கப்பெறுகின்ற கணக்குடன் தொடர்புபட்ட விசேட பொதிகள் அத்துடன் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுடனும் சேர்த்து வேறுபட்ட வகையான இலங்கை ரூபாய் கணக்குகள் பற்றிய விரிவான விபரங்களை முக்கிய விடய ஆவணம் உங்களுக்கு தருகின்றது.

எனினும், சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் மாற்றங்களுக்கும் வங்கியின் கொள்கைகளில் அத்துடன் நடைமுறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கும் அமைவாக முக்கிய விடய ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் திருத்தத்திற்கு உட்படும் என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

நீங்கள் மேலதிகத் தகவல்களை அறிந்துகொள்வதற்கு விரும்புவீர்களாயின், பின்வரும் வழிகள் ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள் www.nationstrust.com அல்லது 24 மணி நேர அழைப்பு நிலையம் 011 4 711411.
கீழே தரப்பட்டுள்ள எவையேனும் உங்கள் கணக்குகள் தொடர்பில் உங்களிடம் ஏதேனும் முறைப்பாடு இருக்குமெனில், தயவுசெய்து முறைப்பாட்டு அறிவித்தலை உள்ளடக்குகின்ற எழுத்திலான சுருக்கமான அறிக்கையொன்றினை **The Complaints Resolution Officer, Nations Trust Bank PLC, 242, Union Place, Colombo 2** என்ற முகவரிக்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசி வாயிலாக **[+94(0)11 4711411]/ [customerservice@nationstrust.com]** என்ற மின்னஞ்சல் ஊடாக எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள், உங்களுக்கு நாம் விரைவாக பதிலளிப்போம்.

| கணக்கு பற்றிய விபரம் | வாடிக்கையாளர்களுக்கான நன்மைகள் | கட்டணங்கள் மற்றும் வேறு வங்கி அறவீட்டு வகைகள் | கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் | முக்கிய நியதிகளும் நிபந்தனைகளும் |
|---|---|---|---|---|
| விசேட கணக்குகள் | | | | |
| நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான்<br><br>2 வருடங்களைக் கொண்ட குறைந்தபட்சக் காலப்பகுதி மற்றும் 18 ஆண்டுகளைக் கொண்ட உயர்ந்தபட்ச காலப்பகுதி கொண்ட இணங்கிய கால வீச்சின் இறுதியில் (“இலக்குக் காலப்பகுதி”) இலக்கிடப்பட்ட தொகையொன்றினை அடைந்துகொள்வதற்கு பிள்ளையின் சார்பில் ஒவ்வொரு மாதமும் நிலையான தொகையொன்றினை ஒதுக்கிக் கொள்வதற்காக(“நிலையான மாதாந்த தவணைக்கொடுப்பனவு”) இது, வாடிக்கையாளருக்காக வடிவமைக்கப்பட்ட கணக்கொன்றாகும். | இலக்காக் கொள்ளும் காலப்பகுதி முழுவதும் உத்தரவாதமளிக்கப்பட்ட வட்டி வீதம்.<br><br>திறக்கப்படும் இக்கணக்கின் நன்மைக்குரித்ததான பிள்ளையின் பெற்றோருக்கு அல்லது சட்டபூர்வமான பாதுகாவலருக்கு உயர்ந்தபட்சம் ரூ. 2 மில்லியன் வரை இலவச ஆயுட் காப்புறுதி. | உரிய காலத்திற்கு முன்னரே கணக்கை மூடுதல், பின்வரும் தண்ட வீதங்களுக்கு உட்படுத்தப்படும்;<br><br>2 வருடங்களில் அல்லது அதற்கு முன்னர் முதலீட்டுத் திட்டத்தினை முடிவுறுத்தல் - நேஷன்ஸ் சேவர் உயர்வான அடுக்கிற்கு எற்புடைய வீதம்.<br><br>2 வருடங்களின் பின்னர் முதலீட்டுத் திட்டத்தினை முடிவுறுத்தல் - நேஷன்ஸ் சேவர் உயர்வான அடுக்கிற்கு எற்புடைய வீதம் + 1% | உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளானர் கணக்கு ஆரம்பிக்கும் படிவத்துடன் சேர்த்து:<br><br>பிள்ளையின் பதிவுச் சான்றிதழின் பிரதி பெற்றோரின்/சட்டபூர்வமான பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டையின் /செல்லுபடியான கடவுச்சீட்டின் பிரதி<br>▪ வதிவிட முகவரி, தேசிய அடையாள அட்டையில் இருந்து வேறுபடுமாயின், முகவரியினை உறுதிப்படுத்துவதற்கு ஆவண ரீதியான சான்று அவசியமாகும். | பிள்ளையின் சார்பில் பெற்றோரினால்/சட்டபூர்வமான பாதுகாவலரினால் கணக்கு ஆரம்பிக்கப்பட வேண்டும்.<br><br>குறைந்தபட்ச மீதி தேவைப்பாடில்லை. எனினும், முழுமையான இலக்குத் தொகையினையும் வாடிக்கையாளர் அடைந்துகொள்வதற்கு இயலுமான விதத்தில் நிலையான மாதாந்த தவணைக்கொடுப்பனவு தொடர்ச்சியாக அனுப்பப்பட வேண்டும்.<br>கணக்கு வைத்திருப்பர் மரணமடையும் சந்தர்ப்பத்தில், நிதியங்கள், பராயமடையாதவரின் பெயரின் கீழ் கிட்ஸ் சேமிப்புக் கணக்கிற்கு மாற்றல்செய்யப்படும்.<br>வங்கியினால் வழங்கப்பட்ட முன்கூட்டியே நிரணயிக்கப்பட்ட முதலீட்டு திட்ட அட்டவணையில் இருந்து இலக்குத் தொகையினை தீர்மானிப்பதற்கு வாடிக்கையாளருக்கு தற்றுணிபுள்ளது ஆயினும் மாதாந்த தவணைக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | கொடுப்பனவை மாற்ற முடியாது.<br><br>இலக்கிடப்பட்ட தொகையானது ஏற்புடையதாயின் அரசாங்க வரிகளுக்குட்பட்டதாகவிருக்கும்.<br><br>நேஷன்ஸ் கிட்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் இன் கீழ் அல்லது தனிப்பட்ட முதலீட்டுத்திட்டத்தின் கீழ் வாடிக்கயாளருக்கு காப்புறுதி காப்பீடு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில், வாடிக்கயைளார் மரணமடையும் நேரத்தில், கிடைக்கப்பெறத்தக்க உயர்நதபட்சக் காப்புறுதித் தொகை, ரூ. 2,000,000 ஆகும். |